**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.269/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : அருள்மொழி |
| Father/Husband's Name | : செந்தில் |
| Village | :வேண்பாக்கம் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.05.2026.

**முதல் விசாரணை:**

நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 31.05.2016 அன்று மதியம் 3 மணியளவில் என்னுடைய இருசக்கர வாகனத்தில் என் வீடான வெண்பாக்கத்தில் இருந்து என்னுடைய இருசக்கர வாகத்தில் வேதாசலம் நகர் செங்கல்பட்டு பிருந்தாவனம் பள்ளிக்கு என்னுடைய மகளின் மாற்று சான்றிதழ் வாங்க வேண்டி சென்றுவிட்டு திரும்பி வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது செங்கல்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையம் அருகே வந்தபோது என் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் என்னுடைய செயினை அறுத்த சென்றுவிட்டனர். அது சுமார் 3½ சவரமாகவும், மேற்படி சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

2. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி திருடுபோன நகைகள் கிடைத்துவிட்டதாக போலீசார் என்னை காவல் நிலையம் அழைத்தார்கள். நான் சென்று எனது நகைகளை அடையளம் காட்டினேன். பின்னர் நகைகளை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று சென்றேன். மேற்படி நகைகளை நான் வீட்டில் வைத்திருக்கிறேன். எனது கையெழுத்துடன் கூடிய புகார் **அதசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயினை தான் அறுத்து சென்றனர். அந்த புகைப்படம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னல் நடந்ததால் எதிரிகளை சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

மாற்று நகை தான் கொடுக்கப்பட்டதா என்றால் என்னுடைய நகை தான் கொடுக்கப்பட்டது. அந்த நகையை பறித்து சென்றிருந்தால் அந்த நகை அறுந்திருக்கும் சா.பொ.1 அறாமல் இருப்பதால் அது என்னுடைய நகை இல்லை என்றால் சரியல்ல. அதசா.ஆ.1 ல் தேதி குறிப்பிடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. முதல் பக்கத்தில் மேலே போடவில்லை.

**மறுவிசாரணை இல்லை**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu